இந்திய தேர்தல் நடைமுறைக்கு டிரம்ப் பாராட்டு

வாஷிங்டன், ஆக.18: அமெரிக்காவில் கடுமையான தேர்தல் சட்டம் கொண்டுவரப்படுவதை வலியுறுத்திய அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்திய தேர்தல் நடைமுறையைப் பாராட்டியதோடு, அமெரிக்க தேர்தல்களில் வாக்காளர் அடையாள அட்டை பயன்பாடு இல்லாதது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கேள்வி எழுப்பியதை நினைவுகூர்ந்தார்.

இதுகுறித்து தனது 'ட்ரூத் சோஷியல்' சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்ட பதிவில் டிரம்ப் கூறியிருப்பதாவது:

இம் மாத தொடக்கத்தில் அமெரிக்கா வந்த இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், அமெரிக்க அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். அப்போது, அமெரிக்காவில் வாக்காளர் அடையாள அட்டை பயன்பாடு இன்றி எப்படி தேர்தல் நடத்துகிறீர்கள்? என்று அதிகாரிகளிடம் ஞானேஷ் குமார் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவில் அண்மையில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் 65 கோடி வாக்காளர்கள் வாக்களித்தனர். இவர்களில் ஒரு சதவீதத்தினர் மட்டுமே தபால் வாக்குகள் மூலம் வாக்குப் பதிவு செய்தனர்.



இந்தியாவைப் போல அமெரிக்காவிலும் ஒவ்வொரு வாக்காளரும் தகுதியான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள ஆவணத்தை வைத்திருப்பது அவசியம். அதற்கு, 'அமெரிக்க வாக்காளர் தகுதியைப் பாதுகாத்தல் (சேவ்) அமெரிக்க சட்டம்' என்ற சட்டத்தை நிறைவேற்றுவது அவசியம் என்று குறிப்பிட்டார்.

அமெரிக்க தேர்தலில் மோசடிகளைத் தடுக்கும் நோக்கில், அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த 'சேவ்' அமெரிக்க சட்ட மசோதா நிறைவேற்றப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கில் இந்தப் பதிவை டிரம்ப் வெளியிட்டார்.

இந்த மசோதா, அமெரிக்க நாடாளுமன்ற மேலவையான செனட்டில் இம் மாத தொடக்கத்தில், விவாதம் மற்றும் நிறைவேற்றத்துக்காக தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், ஆளும் குடியரசு கட்சி மற்றும் ஜனநாயக கட்சி உறுப்பினர்களிடையே இந்தவிஷயத்தில் கருத்துவேறுபாடு நீடித்ததால், மசோதா நிறைவேற்றத்துக்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மேலவை 5 வார கால விடுமுறைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

'சேவ்' அமெரிக்க சட்ட மசோதா குறித்து அமெரிக்க அதிபரின் மாளிகையான வெள்ளை மாளிகை தனது வலைதளத்தில் வெளியிட்ட குறிப்பில், 'இந்தியாவும், பிரேஸிலும் தங்கள் வாக்காளர்களின் வாக்காளர் அடையாள அட்டைகளை, உயிரி பதிவு தரவுதளத்துடன் (பயோமெட்ரி டேடாபேஸ்) இணைத்துள்ளன. ஆனால், அமெரிக்கா, வாக்காளர்களின் சுய சான்றளிப்பைச் சார்ந்துள்ளது' என்று குறிப்பிட்டது.

பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் போட்டியிடுவதை நிரந்தரமாகத் தடை செய்யவும், திருநங்கைக் குழந்தைகளுக்கு செய்யப்படும் உறுப்பு சிதைப்பு அறுவைச் சிகிச்சையைத் தடை செய்யவும் இந்த மசோதா முயல்வது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவை மாற்றத்துக்கு ஆயத்தமாகிறது மோடி அரசு?

தேஜஸ்வி சூர்யா உள்ளிட்ட புதிய முகங்களுக்கு வாய்ப்பளிக்க பரிசீலனை

நமது சிறப்பு நிருபர்

புது தில்லி, ஆக. 18: பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையில் ஆக.20-ஆம் தேதிக்குப் பிறகு பெரிய அளவில் மாற்றம் செய்யப்படலாம் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதில் 6 முதல் 8 புதிய முகங்கள் சேர்க்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. இது குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை மேலும் கூறியதாவது: தற்போது அமித் ஷா, அஸ்வினி வைஷ்ணவ், பிரல்ஹாத் ஜோஷி, மனோகர் லால், ஜோதிராதித்ய சிந்தியா, மன்சுக் மாண்டவியா ஆகிய 6 மூத்த அமைச்சர்கள் இரண்டுக்கும் அதிகமான துறைகளைக் கவனித்து வருகின்றனர்.

இவர்களின் பணிச் சுமையைக் குறைக்கும் நோக்குடனும், அடுத்த ஆண்டு தேர்தலை எதிர்கொள்ளும் மணிப்பூர், கோவா, பஞ்சாப், உத்தரகண்ட், உத்தர பிரதேசம், குஜராத் ஆகிய ஆறு மாநிலங்களைக் கருத்தில் கொண்டும் அமைச்சரவை மாற்றம் இருக்கும்



என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பின்னணியில்தான், தேர்தலுக்கு ஆயத்தமாகும் மாநிலங்களில் கட்சி அமைப்பை வலுப்படுத்த ஏதுவாக, பாஜக தேசிய தலைவர் நிதின் நபின், ஆளும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், அணித் தலைவர்கள் உள்ளிட்ட 60-க்கும் அதிகமானோரை திங்கள்கிழமை நியமித்துள்ளார். இது நிதின் நபின் பாஜகவின் தேசிய தலைவரான பிறகு மேற்கொள்ளப்பட்ட முதலாவது மற்றும் மிகப் பெரிய நிர்வாக மாற்றமாகக் கருதப்படுகிறது.

இதில், இளைஞர் அணி தேசிய தலைவராக இருந்த தேஜஸ்வி சூர்யா விடுவிக்கப்பட்டு அவருக்குப் பதிலாக புதிய முகமான ஹேமாங் ஜோஷி நியமிக்கப்பட்டுள்ளார். தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவரான அமித் மாளவியா விடுவிக்கப்பட்டு அந்தப் பிரிவுக்கு, இதுவரை சமூக ஊடக பிரிவை கவனித்து வந்த தீபக் மாஸ்கே நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி, திரிபுரா முன்னாள் முதல்வர் விப்லப் தேவ் ஆகியோருக்குக் கட்சியில் மீண்டும் முக்கிய நிர்வாகப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பாஜகவின் தேசியப் பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களில் கர்நாடகத்தைச் சேர்ந்த தேஜஸ்வி சூர்யாவுக்கு அமைச்சரவையில் முக்கியப் பொறுப்பு வழங்கப்படலாம் என்று பாஜக மேலிட வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநில ஆளுநர்களும் மாற்றம்?

மத்திய அமைச்சரவை மாற்றத்தோடு சேர்த்து, சுமார் ஆறு மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்களை நியமிக்கவும் மத்திய அரசு ஆயத்தமாகி வருகிறது. இந்த வரிசையில், நீண்டகாலமாக ஒரே மாநிலத்தில் ஆளுநராக இருக்கும் உத்தர பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் (2018-இல் சத்தீஸ்கர், பின் மத்திய பிரதேசம், 2021 முதல் உ.பி) மற்றும் கர்நாடக ஆளுநர் தாவர்சந்த் கெலாட் (2021 ஜூலை முதல் பதவி வகிக்கிறார்) ஆகியோர் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பதவியில் தொடர்கின்றனர்.

இதேபோல, கேரளத்துடன் சேர்த்து தமிழக ஆளுநராகவும் பதவி வகித்துவரும் ஆர்.வி. ஆர்லேகரை ஒரே மாநிலத்தின் முழு நேர ஆளுநராக்கவும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு பிரதமர் நரேந்திர மோடி பரிந்துரைக்கவுள்ளதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

'நீட்' போராட்ட மாணவர்கள் மீதான போலீஸார் வரம்பு மீறல் குறித்து விசாரிக்க உயர்நிலைக் குழு

உச்சநீதிமன்றம்

புது தில்லி, ஆக.18: 'நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளைக் கண்டித்து நடத்தப்பட்ட போராட்டங்களின்போது நிகழ்ந்த காவல் துறையின் வரம்பு மீறல் புகார் குறித்து ஆராய உயர்நிலைக் குழு அமைக்கப்படும்' என்று உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

ஓய்வுபெற்ற நீதிபதிகள், முன்னாள் காவல்துறை டிஜிபி, ஓய்வுபெற்ற சிபிஐ இயக்குநர் உள்ளிட்டோர் இந்த உயர்நிலைக் குழுவில் இடம்பெறுவர் என்றும் குறிப்பிட்டது.

நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளைக் கண்டித்தும், மத்திய கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் தில்லியில் அண்மையில் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்ட மாணவர்கள், கடந்த ஜூலை 20-ஆம் தேதி நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியையும் நடத்தினர். அப்போது, போலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இருதரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால், போலீஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகை குண்டுகள் மற்றும் ரப்பர் குண்டுகள் உள்பட உயிரிழப்பை ஏற்படுத்தாத குண்டுகளால் சுட்டும் போராட்டக்காரர்களைக் கலைத்தனர். இதில் பல மாணவர்கள் படுகாயமடைந்தனர். போலீஸார் சிலரும் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து, இந்தப் போராட்டம் மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், பிகார் என நாடு முழுவதும் பரவியது. அந்த மாநிலங்களிலும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீஸார் தடியடி, துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

காவல் துறையின் இந்த அடக்குமுறைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதுபோல, போராட்டத்தில் காயமடைந்த போலீஸாரின் குடும்ப உறுப்பினர்கள் சார்பிலும் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம், 'அமைதி வழியில் போராடும் உரிமை உத்தரவாதமானது. அதை மறுக்க முடியாது. போராட்டம் நடைபெற்றது என்பதைச் சுட்டிக்காட்டி, காவல் துறையின் வரம்பு மீறிய நடவடிக்கையை நியாயப்படுத்த முடியாது' என்று குறிப்பிட்டது. இந்த வழக்கு ஆகஸ்ட் 3-ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, 'குற்றவியல் பின்னணி இல்லாத நிலையில், நீட் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது காவல் துறையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளை (எஃப்ஐஆர்), தில்லி மற்றும் பிற மாநில அரசுகள் முடித்து வைக்கலாம் அல்லது திரும்பப் பெறலாம். குற்றவியல் பின்னணி என்ற சொற்றொடர் தீவிரமான மற்றும் கொடூரமான குற்றங்களை மட்டுமே குறிப்பதாகும்' என்று உச்சநீதிமன்ற உத்தரவிட்டது.



உயர்நிலைக் குழு: இந்த வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, வி.மோஹனா ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, 'நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளைக் கண்டித்து நடத்தப்பட்ட போராட்டங்களின்போது நிகழ்ந்த காவல் துறையின் வரம்பு மீறல் புகார் குறித்து ஆராய உயர்நிலைக் குழு அமைக்கப்பட உள்ளது. ஓய்வுபெற்ற நீதிபதிகள், முன்னாள் காவல்துறை டிஜிபி, ஓய்வுபெற்ற சிபிஐ இயக்குநர் உள்ளிட்டோர் இந்த உயர்நிலைக் குழுவில் இடம் பெறுவர்.

குழுவில் சேர்க்கப்பட வேண்டிய மற்ற உறுப்பினர்கள் குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்து பரிந்துரைகளைப் பெற்ற பிறகு, உயர்நிலை குழு அமைப்பதற்கான உத்தரவு புதன்கிழமை (ஆக.19) பிறப்பிக்கப்படும்.

நீட் போராட்ட மாணவர்கள் நாடாளுமன்றத்தை நோக்கிய பேரணியின்போது நிகழ்ந்த வன்முறை தொடர்பான காணொலி காட்சிகள் மற்றும் சிசிடிவி கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வுக்காக இந்த உயர்நிலைக் குழுவிடம் சமர்ப்பிக்க உத்தரவிடப்படும்.

இந்தப் போராட்டத்தின்போது பெண் போராட்டக்காரர்கள் குறிவைத்தா தாக்கப்பட்டதாக எழுந்துள்ள புகார் குறித்தும் இக் குழு ஆராயும்' என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

மேலும், எத்தனை போராட்ட மாணவர்கள் மீதான காவல்துறை முதல் தகவல் அறிக்கைகளை ரத்து செய்யப்பட உள்ளன என்ற விவரத்தை சமர்ப்பிக்குமாறு சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவை நீதிபதிகள் கேட்டுக்கொண்டனர்.

அரசமைப்புச் சட்டத்தின் 142-ஆவது பிரிவின் கீழ் உச்சநீதிமன்றத்துக்குள்ள முழு அதிகாரம் பயன்படுத்தப்படலாம் என்பதைக் குறிக்கும் வகையில், இந்த விவரங்களை சமர்ப்பிக்க நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அப்போது, போராட்ட மாணவர்கள் மீதான முதல் தகவல் அறிக்கைகள் ரத்து செய்யப்படுவதற்கு ஒரு வழக்குரைஞர் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த நீதிபதிகள், 'அரசமைப்புச் சட்டப் பிரிவு 19-இன் கீழ், அமைதி வழியில் போராட மாணவர்களுக்கு உரிமையுள்ளது. மேலும், மாணவர்களுக்கு எதிர்காலம் உள்ளது. இதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டனர்.

அப்போது, 'ஜூலை 20 போராட்டத்தில் பங்கேற்றவர்களில் ஏற்கெனவே தீவிர குற்ற பின்னணி உடைய 2,800-க்கும் அதிகமான சமூக விரோத சக்திகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்' என்று துஷார் மேத்தா குறிப்பிட்டார்.

இந்த வழக்கு புதன்கிழமையும் (ஆக.19) விசாரிக்கப்பட உள்ளது.

என்டிஏ தேர்வு முறைகளில் சீரமைப்பு

4 அடுக்கு வினாத்தாள் சரிபார்ப்பு, 600 நிபுணர்கள் நீக்கம்

புது தில்லி, ஆக.18: நான்கு அடுக்கு வினாத்தாள் சரிபார்ப்பு முறை, 600 நிபுணர்கள் நீக்கம் என தேசிய தேர்வு முகமையின் (என்டிஏ) தேர்வு முறைகளில் முக்கிய சீரமைப்பு நடவடிக்கைகள் மத்திய அரசு செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

நீட், யுஜிசி நெட், ஜேஇஇ உள்பட பல்வேறு தேர்வுகளை தேசிய தேர்வு முகமை நடத்துகிறது. இந்நிலையில், இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் வினாத்தாள் கசிவு, யுஜிசி நெட் தேர்வு குளறுபடிகளால் தேசிய தேர்வு முகமை மீது கடும் விமர்சனங்கள் எழுந்தன. இதனால் நிலைமையைச் சீர்படுத்த மத்திய கல்வி அமைச்சகம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதுதொடர்பாக கடந்த திங்கள்கிழமை மத்திய கல்வி அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி ஆலோசனை மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து நீட், யுஜிசி நெட் உள்ளிட்ட தேர்வுகளை சுமுகமாக நடத்த தேவையான அனைத்துப் பாதுகாப்பையும், அதுசார்ந்த உள்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார். மேலும் தேசிய தேர்வு முகமையின் தேர்வு முறைகளை சீரமைக்கும் வகையில், தேர்வுக் குழுவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தேர்வுகள் சார்ந்த 600 நிபுணர்கள் நீக்கப்பட்டு, புதிய நிபுணர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேர்வு வினாத்தாள்களை தீவிரமாக ஆய்வு செய்வதை வலுப்படுத்த, வினாத்தாள்களை நான்கு அடுக்குகளாக சரிபார்க்கும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

தேசிய தேர்வு முகமை அலுவலகம் மிக அவசரமாகவும், விரைவாகவும் புதிய வளாகத்துக்கு மாற்றப்படும். அங்கு மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படை (சிஐஎஸ்எஃப்) குழுக்கள் மூலம், பாதுகாப்பு வலுப்படுத்தப்படும் என்று மத்திய கல்வி அமைச்சகம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

புது தில்லியில் ஓக்லா பகுதியில் இருந்து மின்டோ சாலைக்கு தேசிய தேர்வு முகமையின் அலுவலகம் மாற்றப்பட உள்ளதாகத் தக வலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

MANAPPURAM FINANCE LTD.

CIN: L65910KL1992PLC006623, Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.o. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழ்க்கண்ட கிளைகளில் 16.09.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

அரியலூர், 0117200700042111, 3066, 3067, 3078, 3079, 3091, 3092, 3109, 3121, 3124, 3129, 3135, 3140, 3143, 3144, 0117200730014105, 4107, 4108, 4109, 4125, 4130, 4138, 4139, 4141, 4143, 4144, 4145, 4148, 4154, 4159, 4162, 4163, 4169, 4173, 4174, 4179, 0296, ஜெயங்கொண்டசோழபுரம், 0123700700051345, 1353, 1377, 1378, 1402, 1404, 1419, 1420, 1423, 1429, 1437, 1451, 1453, 1457, 1471, 0123700730038115, 0544, 0546, 0555, 0559, 0564, 0568, 0569, 0575, 0577, 0583, 0592, 0605, 0606, 0607, 0608, 0627, 0628, 0630, 0634, 0636, 0649, 0459, கரூர், அரவக்குறிச்சி கரூர், 0127090700036143, 6196, 6240, 6282, 6290, 7495, 7502, 7511, 7512, 7548, 7560, 7571, 7576, 7577, 7587, 7592, 0127090730022155, 2187, 2195, 2199, 2200, 2201, 2205, 2206, 2217, 2219, 2221, 2230, 2233, 2234, 2243, 2244, 2245, 2247, 2253, 2254, 2262, 2271, 2276, 2278, 2279, 2283, 2291, 2295, 2302, 2303, 2312, 2313, 2314, 2325, 2328, 0175, 0178, சர்ச் கார்னர் கரூர், 0126130700031344, 2051, 2057, 2062, 2064, 2065, 2067, 2079, 2090, 2105, 2109, 2110, 2111, 2113, 2114, 2118, 2121, 2122, 2123, 0126130730026657, 8280, 8281, 8282, 8284, 8285, 8295, 8300, 8313, 8320, 8326, 8343, 0113, காந்திகிராமம் கரூர், 0124910700033072, 3090, 3092, 3098, 3100, 3107, 3116, 3126, 0124910730037186, 7214, 7220, 7224, 7229, 7238, 7239, 7240, 7253, 7254, 7286, கரூர், 0101290700051828, 1985, 1993, 2871, 2888, 2894, 2895, 2897, 2916, 2917, 2927, 2929, 0101290730024197, 4210, 4219, 4222, 4235, 4249, 4254, 4257, 4263, 4268, கரூர் திருச்சி ரோடு, 0122160700035658, 5660, 5664, 5676, 5683, 5690, 5702, 5714, 0122160730040435, 3410, 3426, 3431, 3432, 3433, 3435, 3439, 3440, 3441, 3442, 3451, 3465, 3470, 3474, 3477, 3485, 3491, 3499, 3500, 3502, 3503, காவேரி நகர் குளித்தலை, கரூர், 0116140700037952, 8025, 8810, 8839, 8852, 8866, 0116140730033125, 3132, 3137, 3148, 3150, 3152, 3153, 3154, 3158, 3163, 3164, 3179, 3181, 3185, 3193, 0109, கிருஷ்ணராயபுரம், 0129350700033783, 3794, 3806, 3840, 3857, 0129350730018040, 8042, 8067, 8069, 8072, 8074, 8075, 8096, 8102, 8106, பள்ளப்பட்டி கரூர், 0125090700045708, 5726, 5731, 5757, 5758, 5759, 5774, 5788, 5799, 5805, 0125090730009828, 9829, 9840, 9843, 9844, 9845, 9848, 9863, 9864, 9879, 9881, 9892, 9897, 9900, 9903, 9918, 9941, பசுபதிபாளையம் கரூர், 0124240700039239, 9557, 0712, 0722, 0724, 0755, 0756, 0757, 0763, 0775, 0784, 0785, 0790, 0793, 0794, 0804, 0124240730040046, 0047, 0048, 0049, 0050, 0053, 0068, 0070, 0072, 0073, 0088, 0102, 0117, 0121, 0122, 0144, 0145, 0146, 0148, 0196, புலியூர் கரூர் , 0132650700027135, 8127, 8158, 8209, 8221, 0132650730025765, 5802, 0345, தாந்தோணிமலை கரூர், 0120060700053830, 3954, 4160, 5373, 5379, 5387, 5392, 5404, 5406, 5413, 5416, 5419, 5426, 5430, 5433, 0120060730034325, 4409, 7960, 7971, 7973, 7977, 7978, 7979, 7982, 7983, 7985, 7987, 7991, 7995, 8009, 8024, 8026, 8027, 8029, 8030, 8031, 8042, 8043, 8044, 8045, 8046, 8047, 8048, 8049, 8053, 8056, 8057, 8058, 8059, 8067, 8068, 8072, 8089, 8094, 8095, 8097, 8099, 8113, 8117, 8122, வேலாயுதம்பாளையம் கரூர், 0120990730028594, 1035, 1056, 1057, 1058, 1063, 1064, 1065, 1074, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, 0136200700012646, 2868, 3483, 3484, 3516, 3528, 3702, 0136200730010875, 1964, 1983, 1989, 2011, 0141, நாகப்பட்டினம், 0116230700041911, 2704, 2707, 2711, 2759, 2768, 2769, 0116230730027547, 7548, 7551, 7552, 7553, 7555, 7571, 7572, 7575, 7584, 7590, 7592, 7596, 7601, 7610, 7618, 7620, 7622, நீலதெற்கு வீதி, 0129640700029275, 9277, 0185, 0192, 0195, 0213, 0220, 0221, 0224, 0239, 0244, 0246, 0249, 0252, 0257, 0262, 0265, 0267, 0129640730027452, 7454, 7455, 7457, 7460, 7467, 7472, 7478, 7479, 7486, 7487, 7492, 7493, 7494, 7495, 7496, 7503, 7504, 7513, 7516, 7517, 7518, 7526, 7531, 7534, 7535, 7536, 7537, 7539, 7550, 7551, 7553, 7560, 7565, 7566, 7567, 7569, 7570, 7571, 0272, 0273, 0276, சீர்காழி, 0112720700056306, 6948, 6956, 6957, 6974, 6999, 7000, 7007, 7015, 7018, 7022, 7024, 0112720730006782, 0452, 0474, 0475, 0477, 0494, 0496, 0497, 0282, 0286, 0290, 0293, 0296, 0298, வேதாரண்யம், நாகப்பட்டினம், 0123390700037898, 7901, 7903, 7910, 7927, 7930, 0123390730030657, 0658, 0659, 0660, 0661, 0667, 0679, 0680, 0682, 0683, 0686, 0687, 0691, 0209, 0211, பெரம்பலூர், பஜார் வீதி ஜெயங்கொண்டசோழபுரம், 0102650700799085, 9161, 0412, 0416, 0420, 0421, 0427, 0432, 0435, 0443, 0454, 0466, 0479, 0494, 0496, 0499, 0516, 0530, 0102650730026253, 6254, 6259, 6284, 6288, 6289, 6302, 6306, 6320, 6321, 6322, 6327, 6328, 6330, 6335, 6336, 6349, 6351, 6357, 6359, 6367, 6383, 0245, பெரம்பலூர், 0116560700056200, 6208, 6210, 6211, 6212, 6213, 6220, 6221, 6227, 6229, 6236, 6244, 6246, 6247, 6252, 6269, 6287, 6288, 6299, 6305, 6308, 6313, 6315, 6317, 0116560730018086, 8175, 1771, 1772, 1773, 1776, 1781, 1782, 1791, 1793, 1799, 1800, 1801, 1805, 1806, 1807, 1814, 1818, 1819, 1828, 1840, 1841, 1843, 1858, 1859, 1860, 1863, 1864, 1867, 1871, 1872, 1890, 1893, 1899, 1903, 1912, 0436, 0437, வெங்கடேசபுரம் பெரம்பலூர், 0122310700032540, 2542, 2563, 2612, 3753, 3756, 3757, 3758, 3762, 3771, 3774, 3775, 3779, 3781, 3800, 3801, 3806, 3807, 3811, 3812, 3818, 3819, 3825, 3830, 3831, 3833, 3844, 3848, 3853, 3854, 3855, 3858, 3861, 3864, 3868, 3874, 3882, 3884, 0122310730018093, 8097, 8106, 8107, 8117, 8121, 8122, 8125, 8126, 8127, 8139, 8141, 8144, 8151, 8155, 8156, 8158, 8162, 8163, 8164, 8165, 8166, 8168, 8170, 8171, 8172, 8173, 8174, 8175, 8177, 8178, 8182, 8184, 8185, 8186, 8187, 8188, 8193, 8194, 8204, 8205, 8206, 8210, 8213, 8214, 8215, 8216, 8217, 0371, 0379, 0386, 0388, துக்கோட்டை, ஆலம்குடி , 0128240700045715, 6411, 6412, 6424, 6441, 6442, 0128240730015274, 6312, 6316, 6334, 6335, 6345, 6346, 6348, 6349, 6351, 6354, 6358, 6369, 6370, 0112, 0113, அரீமளம் புதுக்கோட்டை, 0128940700038984, 9495, 9503, 9522, 0128940730008310, 8325, 8338, 8339, அரந்தாங்கி, 0126500700035075, 5078, 5081, 0126500730037531, 7532, அரீமளம் புதுக்கோட்டை, 0132080700022292, 2337, 3066, 3083, 3092, 3102, 3123, 3124, 3127, 0132080730012195, 2207, 2213, 2219, 2222, 2224, 2227, 2231, 2234, 2235, 2236, 2245, 2249, 2251, 2253, 0173, இழுப்பூர், 0126930700056520, 6532, 6560, 6572, 6576, 6588, 0126930730008037, 8055, 8080, 8095, 8096, 8103, 8105, 8112, 8114, 8125, 8129, 0341, கரம்பைக்குடி புதுக்கோட்டை, 0127790700062415, 2440, 2444, 2445, 2457, 2464, 2470, 2479, 2503, 2738, 0127790730055402, 5424, 5432, 0326, கீரமங்கலம், 0133510700026067, 6491, 6494, 6521, 0133510730035303, 5304, 5306, 5310, 5311, 5324, 5328, 5339, 5345, 0107, 0110, கீரனூர், 0115800700052677, 3370, 3384, 3386, 3411, 3433, 3437, 3444, 3446, 0115800730012285, 2286, 2287, 2288, 2295, 2317, 2321, வடக்கு மெயின் ரோடு புதுக்கோட்டை, 0126640700033285, 3286, 3309, 3315, 3344, 3345, 3349, 3353, 0126640730025878, 5882, 5896, 5897, 5898, 5900, 5901, 5902, 5919, 5921, 5922, 5925, 5933, 5947, 5948, 0094, பொன்னமராவதி, 0124470700026052, 6088, 0124470730010796, 0801, 0802, 0803, 0804, 0805, 0824, புதுக்கோட்டை ஆலங்குடி ரோடு, 0114610700044646, 4696, 4702, 4724, 0114610730020859, 0871, 0875, 0878, 0884, 0896, தெற்கு 4வது வீதி புதுக்கோட்டை, 0127730700047448, 7451, 7473, 7475, 7486, 7487, 7494, 7500, 7508, 7512, 7518, 0127730730019147, 9154, 9155, 9156, 9157, 9161, 9162, 9175, 9185, 9201, 9206, 9210, 9215, 9218, 9238, 9241, 9245, 0094, தஞ்சாவூர், ஐயம்பேட்டை தஞ்சாவூர், 0132130700067194, 7290, 7334, 8703, 8708, 8746, 8759, 8762, 8763, 8771, 8781, 8794, 8800, 8807, 0132130730023348, 3349, 3350, 3357, 3359, 3364, 3365, 3366, 3380, 3384, 3387, 3388, 3389, 3412, 3413, 3422, 3423, 3424, 3429, 3433, ஜே எஸ் நகர் கும்பகோணம், 0130307700753061, 3064, 3073, 3074, 3075, 3085, 3090, 3096, 3100, 3102, 3111, 3120, 3122, 3130, 0130307730015675, 5676, 5677, 5680, 5686, 5690, 5698, 5703, 5704, 5706, 5708, 5713, 5714, 5715, 5719, 5722, 5724, 5726, 5729, 5730, 5732, 0204, காவேரி நகர், தஞ்சாவூர், 0116310700048695, 8739, 8766, 9593, 9607, 9609, 9613, 9616, 9625, 9629, 9663, 9679, 9683, 0116310730026436, 6439, 6440, 6442, 6450, 6459, 6467, 6468, 6470, 6472, 6477, 6483, 6492, 6495, 6496, 6498, 6505, 6506, 6520, 0229, 0232, கும்பகோணம், 0131080700036524, 6529, 7432, 7435, 7438, 7452, 7456, 7460, 7461, 7462, 7484, 7486, 7502, 7508, 7510, 7526, 7532, 7538, 7540, 7546, 0131080730013115, 3119, 3120, 3122, 3123, 3126, 3128, 3129, 3132, 3133, 3136, 3137, 3138, 3139, 3140, 3141, 3146, 3147, 3149, 3167, 3171, 3180, 3182, 3183, 3184, 3185, 3187, 3189, 3190, 3195, 3201, 3204, 3208, 3209, 3210, 3213, 0326, 0329, 0334, நாகேஸ்வரம் தெற்கு வீதி கும்பகோணம், 0129770700027110, 7828, 7834, 7838, 7848, 7852, 7860, 7861, 7863, 7864, 7874, 7886, 7888, 7894, 0129770730010093, 0099, 0120, 0121, 0122, 0129, 0309, ஒத்தநாடு தஞ்சாவூர், 0129600700048059, 8098, 8152, 8989, 8991, 9020, 9021, 9026, 9027, 9032, 9037, 9039, 9041, 9042, 9044, 9046, 0129600730027254, 7257, 7261, 7270, 7273, 7274, 7275, 7277, 7278, 7279, 7282, 7286, 7288, 7289, 7290, 7291, 7292, 7293, 7294, 7295, 7296, 7298, பாபநாசம், 0102360700760230, 0231, 0285, 0294, 0295, 0102360730012334, 2335, 2341, 2342, 2354, 2362, 2380, 2381, 2382, 2383, 2384, 2385, 2390, 2391, 0268, 0277, பட்டுக்கோட்டை, 0112290700046442, 6463, 0112290730047274, 7279, 7282, 7294, 7299, தஞ்சாவூர், 0102900700059188, 9330, 9333, 9352, 9354, 9378, 9379, 9385, 9404, 9405, 9406, 9416, 9421, 9433, 0102900730031736, 1752, 1769, 1770, 1771, 1773, 1780, 1782, 1801, 1808, 1814, 1821, 1822, 1